# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை–600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

<u>செய்தி வெளியீடு எண் 13/2019</u> <u>நாள் 10.12.2019</u>

### தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

<u>சாதாரண உள்ளாட்சித் தேர்தல்–2019</u>

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி நீங்கலாக ஏனைய 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 27.12.2019 மற்றும் 30.12.2019 ஆகிய நாட்களில் இரண்டு கட்டமாக தேர்தல்களை நடத்த தேர்தல் அறிவிக்கைகள் வெளியிட்டு, அதற்கான வேட்புமனுக்கள் பெறப்பட்டு வருகின்றன. இந்நிலையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் ஏலமிடப்படுவதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது குறித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் சட்டத்திற்கும், மக்களாட்சி தத்துவத்திற்கும் புறம்பாக நடைபெறும் இத்தகைய செயல்கள் மிகவும் வருந்தத்தக்கது என்றும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பதவியிடங்கள் இவ்வாறு ஏலம் விடப்படுவது மக்களின் உணர்வுகளுக்கு ஊறுவிளைவிக்கும் செயல் என்பதால் ஜனநாயகத்திற்கு ஊறுவிளைவிப்பதை தடுத்திட, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட நிருவாகம் சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுப்பதுடன் இதுபோன்ற செயல்கள் மக்களாட்சிக்கு எதிரானவை என்பதனை மக்கள் உணரச் செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இதுபோன்று செயல்கள் நிகழாவண்ணம் தகுந்த முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

மக்கள் தொடர்பு அலுவலர்